54

# இன எழுச்சிப் பாக்கள்

ஆசிரியர்:

திருவத்திபுரம். வித்துவான்

...ண்ணு. தேவராசன்

O-1
N47
113192

# இன எழுச்சிப் பாக்கள்

ஆசிரியர்:

திருவத்திபுரம்,
மாவண்ணா. தேவராசன்

ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம்
திருவத்திபுரம்.
வ.ஆ.

இரண்டாம் பதிப்பு
பதிப்புரிமையுடையது
விலை 0—3—0

Printed at Sri Lakshmi Press, Tiruvettipuram.
Q. H. N. A. 45 for Sri Lakshmi Nool Pathippagam,
Tiruvettipuram Q. H. N. A. 69 11-3-47-1000

# பதிப்பகம் பகர்வது:

தமிழிசைக் கிளர்ச்சி, திராவிடரின் எழுச்சியையும் திராவிடத்தின் மறுமலர்ச்சியையும் விளக்கும் கண்ணாடி! ஆனால் கண்ணாடியைத் திரையிட்டு மறைத்து நம் உருவினை அதிற்காண முடியாதவாறு செய்வது போலும், தமிழிசை அரங்குகளில் நம் கருத்துக்கிசைந்த கொள்கைகளை இனிய இசையிற் கேளாதவாறு, மடமையை வளர்க்கும் கடவுளைப் பற்றிய பாக்கள்!

அத்திரையைக் கிழித்தெறியும் வாளாகும் இப்பதிப்பக முயற்சி! நெடுநாளாகத் திராவிட மக்கள் இன எழுச்சியை இசையிற் கேட்க விரும்பிய ஆர்வத்தைத் தீர்த்து வைத்திருக்கிறார் தோழர் ம்ராவண்ணா; பண்ணோடிசைந்த இனிய இசையில்! அவர்க்கு எம் நன்றி!

ஒரு குறிப்பு:- "கடவுள் (18-பா) தோழர் நாமக்கல் கவிஞரி"ன் "சூரியன்வருவதும் யாராலே" என்ற செய்யுட்கு மறுப்பாக 1941ல் எழுதப் பெற்றது. "பெரியார் பெருந் தொண்டு" (23-பா)"பெரியார் பிள்ளைத் தமிழில்" வரும் ஒரு செய்யுள் "விதவை மணமே மேலே" (17-பா) காஞ்சித் தமிழ்க்கலையில் 1940ல் வெளிவந்தது. 7, 8, 12, 13, 14, 15, 16, 21 பாக்கள் இந்தி எதிர்ப்புப் போர் நாளில் எழுந்தவை 20-பா நூல் ஆசிரியரின் "அஞ்சல்தாள்" தலைப்பிலிருப்பது. 19, 22-பாக்கள் "ஜனசக்தி"க்கு 1943ல் எழுதப் பெற்றவை இவை எலாம் வருங்காலத் திராவிடப் பிரிவினைப் போராட்டத்திற்கு உரிய ஒரு தூண்டுகோலாகும்; திராவிடத் தோழர்கள், இவற்றைத் தக்க வழியில் பயன் படுத்திக் கொள்வாராக!

# இந்நூலைப் பற்றி

"குடி அரசு"—20-10-45

"..........சினிமா மெட்டுக்களில் சீர்திருத்தம் வழியும் சிறந்த பாட்டுக்கள் பல செறிந்து கிடக்கின்றன! கடவுள், மதம் இவற்றிற்கு ஒரு நல்ல சவுக்கு !........

"திராவிடமணி"—21-10-45

"......இப்பாடல் நூல் திராவிட இன எழுச்சிக்குப் பேருதவியான பல அரிய கருத்துக்களைக் கொண்டு விளங்கு கிறது........"

"பிரசண்ட விகடன்"—15-12-45

"........திராவிடர் கழகக் கொள்கைகளையும் சமூக சீர் திருத்தங்களையும் வற்புறுத்தும் பாடல்கள் .......நல்ல எளிய தமிழ்........"வீணில் இனக் கொலை செயுங் கம்பன் நூல் எரித்து இன நலம் உற்றிடுவோம் !" என்று ஆசிரியர் கூறி இருப்பது அபிப்ராய பேதத்திற்கு இடந்தருவதாகும்......."

"தொழிலாளர் மித்திரன்"—16-2-46

"இன உணர்ச்சியூட்டித் திராவிட இனத்தைத் தட்டியெழுப்பும் பாக்கள். வீழ்ச்சியுற்ற திராவிடர் எழுச்சி பெறும் பாக்கள்........இயக்கக்கொள்கைகளை எளிய மெட்டுக்களில் அமைத்துத் திராவிட இனத்தைத் தட்டி எழுப்புகிறார் ஆசிரியர்........

# வாழ்க திராவிடம்

"மானச சஞ்சரரே!" என்ற இசையிற் பாடுக

வாழி திராவிடமே—பல்லூழி (வாழி)

சூழியற் கைக்கடல் எல்லேமுப் பாலும்
தாழிம யம்வட பாலுஞ்சூழ்ந் திடமேலும் (வாழி)

வீரம் செறிந்தனை; விருந்து புரந்தனை;
மேவுநல் காதலும் மிகவுங்கொண் டுயர்ந்தனை;
நீரோடு நிலவளம் நிலேயுற வளர்ந்தனை;
நீசஆ ரியத்தினுல் நிலேயி ழிந்தனை; (வாழி)

பாழ்செயும் ஆரியப் பார்ப்பனீயங் கொன்று
பலன்தரும் சமதர்மப் பாதையினில் நின்று
"சூழ்சுயமரி யாதை சுகம் தரும்" என்று
சொல்லும் பெரியாரின் துணேகொண்டு நன்று (வாழி)

## 2 திராவிடத் தலேவர் வாழ்த்து

"ஜகத்ஜனனீ" எ. இ. பாடுக

தமிழ்த் தலேவா, மிகவாழி—பல்லூழி (தமிழ்)

அமிழ்தச் சொற்பொழிவு ஆற்றிடும் வீரா,
எமக்குயிர் போன்ருய்; இணேயில் ஈவேரா! (தமிழ்)

"நமதடா இத்திரு திராவிட நாடு;
நாமிதை ஆண்டிடும் உரிமையை நாடு;
அமைதியாய்ப் போரிட்டுக் குடியர சோடு
ஆள்வோம்," என் றேஎமக் கருளினுய் அன்போடு (தமிழ்)

எட்டுமுறையுஞ் சிறைப் பட்டும் சளேக்காமல்
இக்கிழ வயதிலும் எதிரிகட் கிளேக்காமல்
கொட்டுமுரசம்எழ "புரட்சி விளேக்காமல்
கொள்ளேன்வே ருேர் தொழில்" என்றனே; தளராமல் (த)

## 3 தன்மதிப்பியக்கப் பெருமை

"அன்னையுந் தந்தையும்" எ. இ. பாடுக

தன்மதிப் புள்ளவர் தாமே—பாரில்
தலைநிமிர் திராவிடர்; கண்முன்னே நேரில் (தன்)

உண்மைச் சுயமரியாதை—என்றும்
உலகில் முன்னேற்றம் உதவிடும் பாதை!
பெண்மை நலம் போற்றும் தொண்டும்—எல்லாம்
பேசுய்; மக்களெலாம் ஒன்றெனும் மெய்கண்டு (த)

இன்பஞ்சேர் திராவிட நாடு—நமதே
என்றுநாம் நாள்தோறும் இசைத்தினிப் பாடி
அன்புசெய் யாவிடில் நாமெலாம் பேடி—எனவே
ஆருயிர் போயினும் அருஞ்சமராடும் (தன்)

ஆரியம் பாழ்மதம் காங்க்ரஸ் எல்லாம்
அழித்திடும் நம்மின எழுச்சியின் பாங்கை
வீரத்திராவிடர் அன்றோ?—ஒன்றாய்
வீறிட்டெழுந்தவை வீழ்த்துவோ மின்றே (தன்)

## 4 தோழரே வாரீர்

'மன்மத லீலையை வென்றார் உண்டோ' எ. இ. பாடுக

எம்முயிர்த் திராவிடத் தோழர், வாரீர்,
இன்றோர் மனதாகச் சேரீர் இனி (எம்முயிர்)

மும்முடி புனைந்துமுன் முழுதுலகும் வென்று
செம்மையிலாண்டமூ-வேந்தர்சந் ததி வரும் (எம்)

வெம்மையேசேர் ஆரியம்தான்
வீழ்த்திட நாம் முனைவோம்—தினம்
வீறுகொண்டுநம் பழந்தமிழர் சீர்பெற
வீரப் பெயர் புனைவோம்

நம்மை இழித்துரை யாடியும் பாழ்செயும்
இந்து மதம் ஒழிப்போம்—இனி
நலம்செயும் பெரியார் தம்துணை யுடனுழைத்
தின்பம் மிகக் கொழிப்போம்— உளங்கவர் (எம்)

## 5 தனியாட்சி

'உனைக்கண்டு மயங்காத'' எ. இ. பாடுக

தனியாட்சி விரும்பாத தமிழர் உண்டோ?
இனஎழுச்சி விரும்பாத மக்களுண்டோ?
மொழி, கலையிலும், குணமதிலும் நிகரில் (தனி)

வீட்டினி லேவெளி நாட்டினி லேஉள்
காட்டினி லேபனி மேட்டினி லாகிலும் (தனி)

நினைவினிலே கவி புனைவினிலே உல
கினிமையிலே மறத் துணிவினி லாகினும் (தனி)

எஸ்கிமோ ஜாதியும் பனிக்கடல் இனிதென்பான்;

ஈனநீக் ரோவனும் ஆப்ரிக்கா இனிதென்பான்; (தனி)
தக்கதென் றேயாரும் தாயகம் வேண்டுவார்;

தரணிமுன் ஆண்டுபல் பரணிகொள் நம்மிலும் (தனி)

## 6 நீதிக்கொடி ஏற்ற வாரீர்

"மாயா உலகை நீ மதியாதே'' எ. இ. பாடுக

வாரீர் தோழர்காள் மகிழ்வோடே—நலம்
வாழ்த்திடுவீர் திராவிடக் கொடியாட—ஒன்ருய்(வாரீர்)

பாரோர் நலந்தரும் நீதிக்கொடி—அன்று
பானகல் அரசர்கைப் பற்றுங் கொடி—நாயர்
சீரார்த்யாகராயரும் சேவித்த செங்கொடி
செகப் பெரியாரின் கை திகழுங் கொடி

செழிப்பாகும் திராவிடம்—மிக
விழிப்பாகுமேயினி—கொடி
நிழலோரமே நின்று—உழைத்தால்
வாழலாகுமே

என்றுரைத்தே வானில் இலங்குந் துலாக்கோடி
நன்றசைந்தாடுதல் கண்டினி வணங்குதல் (வாரீர்)

## 7 வைதிக வாழ்வு

"மாயாப் பிரபஞ்ச வாழ்வை" எ. இ. பாடுக

வைதீகக் கொடிய வாழ்வை எண்ணியே—இவ்
வையந்தனில் வாடினேன்
ஐயம்பல கொண்டுநான் (வை)

ஐதீகம் சொல்லியவர் அவனியிலே—அந்தோ
ஆருயிர் காதலர்க் கூறுசெய் தேமிக
நாருயிர்த் தோழரின் சீரையும் பாழ்செயும் (வை)

மைதிகழ் கண்ணியர் மனம் வாட்டியே—தம்
மடமையால் வீடெனும் சிறை மாட்டியே
கைதியாச் செய்துளம் களித்திடும் பாழ்—வெய்ய
காதகரேயவர் சாதகம் பார்த்திவண்
மேதக மேதுமில் பாதக மணஞ்செயும் (வை)

பேயா யலைந்தவர் பெருந்தனமே—பெறப்
பிறர் நலமும் கொல்லும் அவர்மனமே
ஓயாக் கவலை நமக்கு உவந்தளிப்பார்—இந்த
ஊனர்க ளேயுல கீனர்கள் பாபிகள்
"தீனதயாபர" ரானபு ரோகிதர் (வை)

## 8 இன்னும் தூக்கமா?

"பரா பரா பாதம்" எ. இ. பாடுக

என் தமிழா ஏனோ இன்னந் தூக்கம்?
உன்றன் நிலையை உற்று நோக்குவாய் (எ)

அன்றுநீ ஆண்டநல் அரசின் திறம் என்னே!
இன்றுநீ இழிந்தே எய்துநிலை என்னே!
என்றும்நீ இவ்வாறு இனிதுயில் வாயேல்
இன்பத் தமிழ்சாகும்; துன்பநிலை யாகும் (எ)

உனக்கின்றிவ் வுலகில் உரிமையேதும் உண்டா?
ஒன்றுமில்லாமல்நீ பொன்றிடுதல் நன்று?
மனக்கவலை நீக்கும் மாண்தமிழ்க் குழைத்து
மாத்தமிழை எங்கும் மகிழ்ந்து பரப்பாமல் (எ)

## 9 பிறமொழி என்?

"மாதரை நினையாதே" எ இ பாடுக

பிறமொழி கலவாதே—தமிழில் (பிற)

நிறைமிகும் தமிழில் பிறமொழி கலந்தால்
குறைமிகும் தமிழினில்; குறைந்திடுங் நலந்தான் (பிற)

முறை முறை காலமாய் முதன் மொழி யாகியும்
முட்டின்றித் தனித்தியங் கிடு மொழி யாகியும்
சிறு மொழி பற்பல ஈன்றதா யாகியும்
சிறிதுமிந் நாள்வரை சிதைவுறாத் தமிழினில் (பிற)

தன்னிடம் வேண்டிய பொருளுள்ள போது
தகுமொழி நூற்கலை தானுள்ள போது
பின்னொரு மொழிக்கடன் வாங்கல் ஒவ்வாது
பேதைமையாமது; பெருகுமதால் தீது (பிற)

## 10 பிரிவினை

"நாட்டியக் கலையே' எ. இ. பாடுக

பிரிவினைச் செயலே பெருநன்மை தருவது (பி)

ஒருவிதத் துன்பமும் இன்றி எல்லோரும்
மருவியுள் மகிழ்ந்தினி வாழச் சீராரும் (பி)

பெருமைசேர் நாட்டும் பிரிவினையால் என்றும
பெருகிடும் ஒற்றுமை; பிழையிலை ஒன்றும்
ஒருவர்நாட் டொருவர் மதம், பொருள், கலையால்
உள்ளிரக்க மின்றிச் சுரண்டுதல் இலையால் (பி)

பலமதம், கடவுள், கலை, இனம் மொழியால்
பாரில்வே றுனவர் தமையுமோர் வழியால்
நலமுற இந்தியர் எனநவின் றாலும்
நாட்டில் கலகமெழல் உறுதியீ தாலும் (பி)

## 11 திராவிடர் கழகம்

'மாமழைக் காலமும் போனது' எ. இ. பாடுக

திராவிடர் கழக மெழுந்தது; இனி தீமை ஒழிந்தது
அராவிட ஆரியம் அழிந்தது; வருணாசிரமம் விழுந்தது (தி)

எம்முயிர் திராவிடம்; இன்பஞ்சேர் திருவிடம்
மும்முடி வேந்தர்கள் வாழிடம்; முறை செங்கோன்மைக்கு
உறைவிடம் (தி)

சுயமரியாதையும் நீதியும் சேர்ந்தது;
நயமார் சமதர்மம் நேர்ந்தது; நற்குடி யரசும் வாய்ந்தது
சரிகை குல்லாக்களும் ஜமீன்களும் போச்சு!
பெரியார், அண்ணாவின் பேச்சுப் புகழ்எங்கும் பரவலாச்சு

## 12 நீதிக் கட்சியில் சேர்க

"ஸ்ரீதர முராஹரி" எ. இ. பாடுக

நீதிக்கட்சியிற் சேர்வீர் நேயர்களே, நம் (நீதி)
மேதினியில் திராவிடர் மேன்மை கருதிடும் (நீதி)

ஆதி முதற் கொண்டிங் காரியர் நமக்குச்செயும்
நீதினை வெளிப்படுத்திட தினமும் உழைத்திடும் (நீதி)

ஒவ்வொரு வகுப்புக்குள்ள உரிமையை அளந்துதரும்
செவ்விய முறையில் செல்லும் திராவிடர் கழக மெனும் (நீதி)

நித்தமும் நியாயப்படி நிறுத்தி அளித்திடச்
சித்தமாய்த் திராசுக்கொடி திகழும் கழகமெனும் (நீதி)

காந்தியைக் கடவுளென்பார்: காங்கிரஸைக் கங்கை என்பார்!
மாந்தரோ விழித்தினி மறுத்ததை ஒழித்து நல்ல (நீதி)

திராவிடநாடு நமக் குரிமையாய் ஆக்கிட
பெரிதுழைக்கும் பெரியார் தலைமையின் கீழினி (நீதி)

## 13 பார்ப்பனச் சூழ்ச்சிகள்

"பொய்—மஞ்சள் பெட்டியில் மருத்துவம்" எ. இ. பாடுக

பஞ்சையாம் பார்ப்பனர் சூழ்ச்சியைப் பாரில்
பகர்வேன் வாருங்கள்!—செந்தமிழ் மக்காள்,
ஒன்றாய்ச் சேருங்கள். (நான் பஞ்சை)

கொஞ்சங் கொஞ்சமாய் வடக்கிலிருந்தே—கெஞ்சிக்
கொஞ்சியே தஞ்சமென்றே நம்பால் வந்தார்!
அஞ்சல் எனுஞ் சொல்லைத் தமிழர்கள் தந்தார்!
கேட்டு—அகமகிழ்ந்தார் அன்று

ஆரியர் செயல் நன்றா?
ஆய்ந்தே பாருங்கள்—திராவிடர்
அன்பைத் தேருங்கள்! (பஞ்)

குந்தியே நன்கு வாழ்ந்திட எண்ணிச்
செந்தமிழ் மக்கள் தாழ்ந்திட மண்ணில்
அந்தமில் பொய்ப் புராணங்கள் பண்ணி

பந்திபோல் நம் நாட்டை
மயக்கியே பல கேட்டை
மகிழ்வோ டளித்தனர்—தமிழரை
வருத்திக் களித்தனர் (பஞ்)

சாதிசமய மதச் சாத்திரங் காட்டிப்
பேதமைதருந் தெய்வப் பித்தமும் கூட்டி
மேதினியில் நமக்கறிவின்மை யூட்டி

ஆதியிலே தம்மை
வேதியரென நம்மை
அடுத்துக் கெடுத்தனர்—அடிமையாய்
ஆக்கி விடுத்தனர் (நான் பஞ்)

"வேண்டாம் தீப் பார்ப்பனர் கூட்(டு)" என்றோரைத்
தீண்டாமை சொல்லியே வாட்டென்றார்கள்
தாண்டா திருக்கத்தலை பூட்டென்றார்கள்

தண்டமிழரைப் புலை,
சண்டாளரெனக் கொலை
சாட்டி வதைத்தனர்—கழுவினில்
மாட்டிச் சிதைத்தனர் .... (பஞ்)

தேசீயம் காங்கிரஸ் பாரத மாதா
வேசி இந்தி; கதர் காந்தியை நீதான்
பூசனைபுரி சுயராஜ்ஜியமே தான்

வாசமாய் வருமென்றே
மோசமே செய்கின்றார்
வஞ்ச ஆரியர் கொடுமை செய்
வெஞ்சொல் பூரியர் (பஞ்)

## 14 நடராசன் கைமாறு நிலை

பண்: முகாரி தாளம்: ரூபகம்

செந்தமிழ் காத்திடச் சித்தங் கலங்காது
சிறையினில் செத்த நடராசா—தமிழர் ராசா—நீ
பைந்தமிழ் அன்பினால் பார்ப்பன ராட்சியில்
பாழுமிந்திக்குப் பலி ஆனாய் வீர—னானாய்!

நடராசன் எல்லார்க்கும் நல்லவன் என்று சொன்ன
ராமலிங்கர் சொல்லை-நாட்டி-வீரம்-காட்டி-நம்
மடத்தமிழர்க் கறிவு மகிழ்வுடன் ஊட்டிப் போய்
மஞ்சள் பெட்டி யோட்டிய மகனே தமிழர் மகனே.

லக்குமணக்குமாரா, நடராசனென்னுந்தீரா
நற்றமிழ்காத்த வீரா கெம்பீரா, தமிழ்ச் சூரா, உன் போல்
தக்கவரை என்றினித் தரணியிலினிக் காண்போம்?
தமிழ்த்தாய்க்குத் தொண்டுசெய்த தமிழர்—எங்கள் தமிழா.

## 15 தாலமுத்துக் கையறு நிலை

பண்: நாதநாமக்கிரியா தாளம்; சாபு

குடந்தைவாழ் தாலமுத்தே—கூத்தற்கு*
உடந்தையாய் உயிர் விட்டாயோ?—நீ
நடந்தே சிறை நோக்கி
நலமில் இந்தி போக்கி
நானிலத்திலிறந்தாய்—தமிழர்
நாடி யுன்னைத் தேடி வாட எங்கே நீ மறைந்தாய்? (கு)

பழந்தமிழர் மரபில்—வந்து
செழுந்தமிழ் வீரம் காட்டி
உழந்து பலதுன்பம்—உதறிச் சிறு இன்பம்
உயிர் தனையும் கொடுத்தாய்—பாழும்
உஞ்சி விருத்தி மஞ்சள் சூழ்ச்சியை
ஒரு நொடியில் கெடுத்தாய்! (குடந்)

காங்கிரஸ் என்னும் பேரால்—பார்ப்பார்
தீங்குகள் செய்வதனை—நீ
பாங்குடன் விளக்கிப் பைந்தமிழ்த் துலக்கிப்
பயமின்றிச் சிறைக்குச் சென்றாய்—இன்று
பாதகராம் காதகர்கள் பார்ப்பனர் சூழ்ச்சி வென்றாய் (கு)

## 16 மறைந்த பன்னீர்செல்வம்

"பண்டித மோதிலால் நேரு" எ. இ. பாடுக

எங்கள் சர் பன்னீர் செல்வத்தை எங்குந் தேடியே
எங்கும் தேடியே உள்ளம் மங்கும் வாடியே
துயரம் பொங்கும் கோடியே (எங்)

*கூத்தன்: சிறையிலுயிர் நீத்த தியாகி லெ. நடராஜன்

திங்கள் ஒரு நூறு சென்றும்
செல்வம் சேதி காணோம் ஒன்றும்,
இங்கரிய நம் செல்வத்தை இழந்திடுவோமோ?
இழந்திடுவோமோ—துன்பம்-உழந்திடுவோமோ?
—மனந்தான்—அழுந்திடுவோமோ? (எங்)

விருத்தம்

ஆயிரத்தெண்ணூற்றெண்பத் தெட்டாம் யாண்டில்
அழகிய ஜூன் மாதத்தில் ஓராந் தேதி
தூய தமிழ் உடையார்நற் குலத்தில் மேன்மை
சூழ் தஞ்சை மாநகரில் வந்த தோன்றல்
ஏய உயர்படிப்பெல்லாம் இனிது கற்றே
இலண்டனிலே வழக்கறிஞர்ப் பட்டம் பெற்றே
நேயமுடன் உழைத்துழைத்து நீதிக்கட்சி
நிலைபெறவே தொண்டு செய்த நிகரில் சிங்கம்

பாட்டு எடுப்பு

இந்தியா மந்திரித்துணையா யிருந்திடுக என்றுங்கிலத்
தந்திரி நம் தமிழ் வள்ளலைத் தானழைத்தாரே
தானழைத்தாரே—மோசம்—தானிழைத்தாரே;
நமக்குத்—துயர் விளைத்தாரே (எங்)

விருத்தம்.

ஐயாற்றில் பார்ப்பனரின் அகங்காரம்
தனைவீழ்த்தி நமக்கங்கன்றே
செய்யாற்றின் செந்தமிழில் சீர்பெறக் கல்லூரி ஒன்று
செய்திங் கென்றும்
கையாலா காத எதிர்க் கட்சியினைக்
கடைசிவரை எதிர்த்து நின்று
மெய்யாய்ப் போய் வருகின்றேன் என வானில்
மேவி மறைந்தார் இன்றையோ!

பாட்டு எடுப்பு

தமிழ்நாடு தமிழர்க் கென்றும், தர்ப்பை இந்திப்
பேயைக் கொன்றும்
அமிழ்நாடு தமிழ் வளர்க்க அடைந்த போதங்கே,
அடைந்த போதங்கே-தாழி-உடைந்தாற்போலிங்கே
"ஹனிபால்" மறைந்ததோ எங்கோ?—கடலில்
உறைந்ததோ எங்கோ? (எங்)

விருத்தம்

தண்டமிழ்ப் பெரியார் ஏனைச் சகமெலாம் கலங்கி நிற்க
மண்டெழில் பன்னீர்ச் செல்வம் மறைந்த ஓர் இடங்
காணுமல்
கொண்டிடர் உள்ளம் நொந்து கூவிடும் கற்றுப் போல்
வண்டமிழ் மக்கள் ஏங்க வருந்தியே மறைந்தார் எங்கோ!
(எங்கள்)

## 17 விதவை மணமே மேலே!

"விபவ சுகுண தேவா" எ. இ. பாடுக.

விதவை மணமே மேலே;
வேண்டிடு வீரே; மேதினியோரே! (வி)

உதவியின்றி உளமுடைந்தே
அதிக துன்பம் அழுதடைந்தே
கதறும் கைம் பெண் கலங்கி நைந்தே
கவலாதிவர்கள் களிப்பாரக்
கருதி னினிமேல் (வி)

கண்ணி ரண்டும் பெற்றுஞ் சீரார்
பெண்ணைக் கொல்லும் பேதையீரே,

எண்ணி னிந்தச் செய்கை நேரோ?
இலை எனவே—இளம் பிடிகள்
இன்புறவே (வி)

ஆண்கள் கொள்ளும் காதலுக்கும்
மாண்பெண்—கள் கொள் காதலுக்கும்
காண்பீர் மாறு பாடுமக்கேன்
கருதும் வன்மைக்—கண்ணிலையோ?
கைமைநீக்க (வி)

காதலுக்கும் கட்டு முண்டோ?
சாதலுக்கும் உறுதி கொண்டால்?
ஆத—லால் நீர் ஏது கண்டீர்?
அரிவையர்கள் அகமகிழ்ந்தே
அன்பாய் வாழ (வி)

மனைவி செத்தும் மணம் புரிந்த
கணவன் போல் கொழுநனிறந்த
துணையில் பெண்ணும் துணைசிறந்தே
துன்ப மொழிக்க இன்பம் செழிக்கப்
பண்பு கொழிக்க (வி)

"பெண்டிங்" செய்த சதிச்சட்டம்
பெண்டிர் கட்கே பெருங் கஷ்டம்
மண்டும் கைமை மிகநஷ்ட
வாழ்வளித்து வருங் கேட்டை
மாய்த் தொழிக்க (வி)

புருடன் போயின் பூ நகையே
வருடும் மஞ்சள் போம் தகையோ?

குருடனே, கேள்; காதல் மிகையோ?
　　கூடுமுயிரைக் கொல்லுவாரோ?
　　　　இலை எனவே (வி)

தனிக் கொட்டத்துத் தங்குபரிக்கும்
கனைக்கல் இன்ப ஊண் உண்டிருக்கும்
மனைக்கண் சனிப்பெண் துயர் தரிக்க
　　வாட்டு முங்கள் மதம் நீக்கி
　　　　வாழச் செய்ய (வி)

இந்தியாவில் இரண்டுகோடி
வெந்து கைம்பெண் சிந்தைவாடிக்
கொந்தும் காதற் பசித்தீக் கூடிக்
　　கொண்டு பழியைக் குலைந்திழிவைக்
　　　　கொள்ளாதிருக்க (வி)

## 18 கடவுள்

ஏற்ற இசையில் பாடுக.

சூரியன் வருவதும் இயல்பாலே;
　　தொல்மதி தெரிவதும் சூரியனால்;
காரிருள் வானில் படுமீன்கள்
　　கனன்று சுழல்வதால் விளங்கிடுமே!
பேரிடி மின்னல் கொண்டலினால்
　　பெருமழை பெய்வதும் கதிரவனால்!
பாரிவை யெலாம் படைத்திட ஓர்
　　பரம் பொருள் இருந்திட வேண்டாமே!

தண்ணீர் விழுந்ததும் முளைபுல்கள்
        தரையினில் பரவிய விதையினால்தான்!
மண்ணில் வித்தின்றி மரமேது?
        வளர்தரு சூரியன் நீர் உணவால்;
கண்ணில் தெரியாச் சிசுவையெல்லாம்
        கருவில் வளர்ப்பதும் தாய் தொழிலே!
எண்ணிப் பார்த்தால் இவைக் கெல்லாம்
        ஏனோர் கடவுள் துணைவேண்டும்?

எத்தனை பிணி? நோய்? எத்தனைபார்!
        இத்தனை தீமைகள் ஈந்தவர் யார்?
எத்தனை கோடி உயிர் வகைகள்!
        என்றும் வாடி வருந்துவதேன்?
எத்துணைக் கொடிய உயிர் வகைகள்
        எண்ணத் தொலையா இன்னல்கள் பார்!
இத்துணை யிங்கே இயற்றிய ஓர்
        ஈசனும் கருணா கரனாமோ?

அல்லா, அரன், அரி, ஏசு, புத்தர்,
        அருகர், எனப்பல பேர்வைத்தார்;
எல்லாம் நம்மை ஏய்ப்பதற்கே;
        இயம்பக்—காணத்—தொட முடியா
வல்லான் அவன் எங்கும் வாழ்வனென
        மறைகள் முழுங்குவ துண்மை எனில்
சொல்லால் உருவால் உருவால் தொழுதிடுமோர்
        சூழ்ச்சியின் மெய்ம்மை தான் என்ன?

வெந்த மலத்தும் கொடியரிடம்
        விரும்பி வாழ்வோன் நின்மலனோ?

இந்தக் கோழை உலகையவன்
 எண்ணம் போல நடத்துவானேல்
எந்த முறையில் இவன் நல்லன்?
 'ஹிட்லர்'தனினும் மிகக்கொடியன்!
வந்தனை செய்திக் கொடியவனை
 வணங்கலும் அறிஞர்க் கழகாமோ?

நமக்கோர் கடவுள் வேண்டுமெனில்
 ஞாயந் தனக்குட் பட்டேவர்க்கும்
இமைக்கும் அளவும் கொடுமை செய்யா
 இன்பக் கடவுள் இயற்கையேதான்!
சுமக்கும் கொடுமை தொலைந்திடவே
 சுகம் சேர் அறிவே அன்பேதான்
நமக்குக் கடவுளாம்; ஏழை
 நற்றொண்டே தான் வழிபாடாம்!

## 19 பாரில் நீங்கள் எங்குள்ளீர்?

"விடுதலை; விடுதலை" எ. இ. பாடுக
தோழர்காள், தோழர்காள், தோழர்காள்!

நெற்றி வேர்வை நிலத்தில் வீழ நெஞ்சு வந்து ழைத்திடும்
பற்றிலாத ஏழை மக்காள் பாரில் நீங்கள் எங்குளீர்?
காலை மாலை அல்லும் பகலும் கணங்கள்தோறும் வருந்திநீர்
வேலை செய்தீர்; அன்றி வேலைக் கேற்றகூலி கொண்டிரோ?
வீடு வாசல் நாடு நகரம் யாவும் கட்டித்தந்துளீர்,
பாடு பட்டீர் அன்றியந்தப் பயனை யுண்போர் நீங்களோ?
உடலுழைப்பிலாத செல்வர் உலகை யாண்டு லாவிட
நடவு செய்தும் நாளும் நீங்கள் நாலணுவுக்க ழுகின்றீர்

கோடி செல்கள் கூடிப்புற்றைக் கட்டிவைக்கக் கண்டரா
ஓடி வந்துட் புகுந்துகொண்டுலாவு நீதி காண்கிறீர்
வாயு முண்டு; கையுமுண்டு; மெய்யில் வீர மிக்குண்டு;
போயும் போயும் வலிமை யில்லாப் புரோகிதர்க்கேன்
அஞ்சுவீர்?

தெய்வம் செய்த தீமை என்று தியங்கி நொந்து வாழ்கின்றீர்
பொய் நிறைந்த செல்வர்காலில் போய்விழுந்து மாள்கின்றீர்
உங்கள் சக்தி உங்கட் கென்றும் பயன்படாத வழியிலே
தங்கு மூடச் சாத்திரங்கள் தாங்கி வீணில் அழிகின்றீர்!
மக்கள் யாரும் ஒக்க வாழ்தல் மாட்சிமையாம் அவ்விதம்
தக்க வாழ்வு சொர்க்க வாழ்வு தந்த நாடு ரஷ்யாவே!
ஏழையில்லை; அடிமையில்லை; ஏக்கமில்லை; இன்பமே
சூழ வாழும் ரஷ்யா நாட்டின் சிறப்பை நோக்கிச்சென்மினோ
அஞ்சியஞ்சி கிடைந்தடைந்த அல்லல் ஈண்டுப் போதுமே
விஞ்சி நிற்கும் பகைவர் வீழ வீறு கொண்டெழுமினோ!
யாவருக்கும் இன்பம் என்று முரசடித்த லெனினடி
மேவி வாரீர்; பெரியாரின் கீழ் ரஷ்ய இன்பம் மேவுவோம்!

தோழர்கள்! தோழர்காள்!! தோழர்காள்!!!

## 20 வேட்கைப்பா

**ராகம்: இராகமாலிகை (விருத்தம்)**

ஆதிதமிழ்த் தேமொழியை மேதினிஎல் லாமும்
அகமுவந்து பயின்றுயர்தல் மிக நனியும் வேண்டும்!
அருள் தமிழ்க்குத் தொண்டியற்றும் பொருட் புகழும்
வேண்டும்!
அன்பொடு பெற்றோரை நிதம் என்புருகத் தொழுதே

நீதிநெறி வழாக் கல்விஒ கிடுதல் வேண்டும்;
நேரியற்கை எழில்காணும் பேருவகை வேண்டும்;
நிலத்ததமிழ்க் காதல்மணம் கிளைத்து யர்தல் வேண்டும்;
நெஞ்சிரங்கி எவ்வுயிர்க்கும் கொஞ்சும் அருள்வேண்டும்

சாதிமத பேதமெலாம் காதிடுதல் வேண்டும்;
சமதர்ம முறையுலகால் அமைதி யுற வேண்டும்;
தையலர்கள் நமக்கிணையாய் உய்யும் நெறிவேண்டும்!
தன்னுணர்வே உலகெங்கும் நன்னர் எழ வேண்டும்!

வீதி தொறும் கலைஞானம் போதித்தல் வேண்டும்!
விண்ணிலுறை கடவுளின்பம் மண்ணிலுறவேண்டும்!
வேண்டியநற் பொதுவுடைமை யாண்டும் எழவேண்டும்
விளைந்த இவை அனைத்து முற உழைத்திடவேண்டுவனே!

## 21 பாட்டாளியின் கொடி

"தாயின் மணிக்கொடி" எ. இ பாடுக

பாட்டாளியின் கொடி பாரீர்—அதன்
பரந்த நிழலிருந் துழைத்திட வாரீர் (பா)

கூட்டான வாழ்க்கையின் இன்பம்—வைரம்
கூடிமிக் கோங்கி வான் நாடிய கம்பம்;
தாட்டிக மாய்நிற்கும் காட்சி—அதன்
தலையில் பறந்தொளிர் செம்மையின் மாட்சி (பா)

செக்கச் சிவந்தங்குத் தோன்றும்—தூய
செங்கொடி நம்கொடி எனத் தெரிந்தான்றோர்
மிக்க பயன் பெறவேண்டி—அந்நாள்
விரும்பியகொடி; முடியாட்சியைத் தாண்டிப்; (பா)

நாயர் பெருமான் முன்கொண்ட—கொடிகாண்!
நற்றியாகராயரும் பண்டுகைக் கொண்டார்!
தூயகம் பனகால் மன்னர்—பற்றித்
தோலாமல் ஆண்டிடத் துணைசெய்த கொடிகாண்!

துலாக்கொடி யின்சம நிலைகாண்—அறிவைத்
துலக்கிடும்; எவர்க்குமே வஞ்சங்கள் இலைகாண்!
நிலவும் நலமெலாம் நிறுத்தே—அவரவர்
நேர்மைக்கியைய அளிப்பேன் என்றுரைக்கும்!

சிவப்புநிறம் தொழிலாளி—சிந்தும்
செந்நீரைக் காட்டிடும்; கொடும் முதலாளி
தவப்பயன் ஆபத்தைக் காட்டும்—இந்தத்
தத்துவம் நிறைந்தது; ஒற்றுமை யூட்டும் (பா)

செங்கொடி நம்கொடி என்றே—தினம்
சேர்ந்தொன்றாய்ப் பெரியாரின் தலைமையில் நன்றே
எங்கெங்கும் ஏற்றிநம் உரிமைக்—கமர்செய்(து)
எல்லோரும் இன்புறச் செய்தல் நம் கடமை! (பா)

## 22 எழுங்கோள்

கிளிக்கண்ணி இசை

நாளும் நாளும் பசியால் நலிந்து மெலிந்துழன்று
மீளாக்கடிமை வாழ்வில்—என்றும்
மாளுமக்காள்! எழுங்கோள்?

கொள்ளைய நீதி கொண்ட குறும்பர்ச் சமூகத்தினால்
தள்ளுண்டே பரிதவிக்கும்—மக்காள்
துள்ளி விழித் தெழுங்கோள்!

பூதல மீதில் என்றும் நீதிக்கழிவில்லையால்!
தீ(து) அநீதிக் கொடுமை—எல்லாம்
மோதிக் கண்டித் தெழுங்கோள்!

கோழையுல கொழித்துப் பிழையெலாமழித்து
வாழவோர் நல்லுலகம்—இன்றே
தாழாது கண்டெழுங்கோள்!

பாட்டாளி மக்காள், நீங்கள் பகுத்தறி விழந்து வீணில்
வாட்டமடைந்திடாதீர்—காலம்
கூட்டியதால் எழுங்கோள்!

பழமைப் புராணமூடப் பழக்க வழக்கத்தலை
அழிவுற மீண்டும் உம்மைக்—கட்டா
திழிவுறுத்தே எழுங்கோள்!

காலம் கூடி விட்டதால் சாலவிழிப் பாயினி
ஞாலமுடிவாம் சண்டைக்—குற்ற
வேலை யாற்ற எழுங்கோள்.

கட்டுப்பாடாக உங்கள் திட்டங்களைச் செய்வீரேல்
மட்டில்லாப் பொதுவுடமை—ஆட்சிச்
சட்டங்காண்பிர்; எழுங்கோள்;

எட்டுத்திசையு மினிக் கட்டுப்பாடாகப் பொதுத்
திட்டம் வகுத்துழைத்தால்—அடிமைக்
கட்டறுந்திடும் எழுங்கோள்;

எழுங்கோள் எம் ஏழைமக்காள்; எழுங்கோள் எம்
தொழிலாளிகாள்!
விழியுங்கோள் அடிமைமக்காள்—பெரியார்
உழைப்பினைக் கண்டினிமேல்

## 23 பெரியார் பெருந்தொண்டு

இராகம்:— இராகமாலிகை (விருத்தம்)

கள்ளுக் கடைமறியல் உள்ளன்புடன் முதலில்
கணக்கற்ற தொண்டரோடும்
கவின்மிக்க ஈரோட்டில் தவமிகச் செய்ததால்
கடுஞ்சிறையில் ஒருமாதமும்,
காணாமை, தீண்டாமை மாண்போரில் வைக்கத்தில்
காவலிருமுறையும் சென்றும்,
கதரினையாதரித்தே சென்னையில் பேசும்
காரணத்தால் ஒரு முறை,

பள்ளத்தில் வீழ்ந்ததொழி லாளிகளை எழுப்பிடப்
பண்புடன் நாகை ரயில்வே
பாமரர்தம் வேலை நிறுத் தந்தனக் காதரவு
பாலித்ததற் கொருமுறை
பட்டகடனுக்காக மக்களைச் சிறைசெய்யும்
பாழ்ச்சட்டம் தனை ஒழிக்கப்
பாரித்துரைத்ததற் கொருமுறை, பொதுவுடைமைப்
பண்பரசை யாதரித்தே

வெள்ளப் பெருக்கொத்த சொற்பொழிவு செய்த ஒரு
வியன் செய்கை தனக்கொரு முறை
வேரொடும் ஆரியப் பார்ப்பனியம் சாய்த்திட
விரும்பி நன்குழைத்து வருங்கால்,
மேலான தமிழ்வாழ நம் நாட்டில் வரும் இந்தி
மேவுகட்டாயம் ஒழிய
வீர அறப்போர் புரியச் சீரியத் தமிழ்மாதர்
வேண்டும் என்றதற் கொருமுறை

தெள்ளுந்தமிழ் வீரத்தை எல்லாப் புவிமுன்னும்
    திகழநன்றாய்க் காட்டியே
சிறைசென்று தமிழர்தம் குறை கொன்ற வீரனே,
    சிறுதேர் உருட்டியருளே;
திரள்மணிச்சங் குருட்டுகா விரித்தமிழ் நாடனே,
    சிறுதேர் உருட்டியருளே,
செந்தமிழர் தேருருட் டிட வந்த மாபெரியோய்
    சிறுதேர் உருட்டியருளே!

## 24 ஏன் பிறந்தோம்?

"என் எடுத்தேன் பவமே" எ .இ. பாடுக

ஏன்பிறந்தோம்? அடி மைமக்கள் என்றிடத் தானோ?
    இதுநாள் வரைநாம் உழைத்ததெலாம் வீணோ?
வான்பிறப் போகெட்ட ஆரிய வைதிகக் கூட்டம்?
    வையமாண்ட நமக்கென்றிண் டாட்டம்?

விருத்தம்

நாடாண்டபெருமக்கள் அடிமையுற
    நாடோடிக் கூட்டம் வாழ்தல்
காடாளும் புலியினத்தை நரிக்குலந்தான்
    வெல்லுமொரு கதையை அன்றோ?
பாடாத வீணையில்லை; பண்மிழற்று
    வோனின்றி வீழ்ந்தீர்; இந்நாள்
தேடாத வீணைஎல்லாம் திருப்பெரியார் பாடவைத்தல்
    செவிகொள்வீரே!

(பாட்டெடுப்பு)

நீதியில் லாதவர் நேசத்தி னால் வந்த மோசம்—கெட
    நெடுந்துயில் நின்று விழித்தெழுவோம்
        நம் தேசம்
மேதகு திராவிட நாடென்றறி ந்தம ராடி—நாம்
    வீரர் குலம் என மெய்ப்பித்திடாமலே வாடி (ஏ)

## 25 கூடி உழைப்பீர்

பண்: ராகமாலிகை தாளம்: ஆதி

உழைப்பீர் அனைவருங் கூடி—நம்
ஏழைகள் நன்மையை நாடி—இனி (உழை)

தொழிலாளிக் கென்றே வாழ்ந்து—நிதம்
துன்பங்கள் பற்பல சூழ்ந்தும்
பழிமிகச் செய்திடும் ஆரியம் வீழ்த்திப்
பாரில்நம் திராவிடர்கழகத்தில்சேர்ந்து இனி (உ)

இந்தியா நாடல்ல; கண்டம்—இதை
இனிதுணர்ந்தால் நமக்குண்டாம்;
சொந்த நாட்டுரிமையைப் பெற்றினி வாழும்,
சுதந்திர இன்பம் நம் தமிழரைச் சூழும் (உ)

பெரியார் பெருந்தொண் டாற்றி—தமிழ்ப்
பெருமைகள் யாவையும் போற்றி
அரிய சமதர்ம ஆட்சியை நாட்டி
அன்புறுந் தமிழருக் கின்பமும் கூட்ட (உ)

## 26 நம் தாய் நாடு

"நமது ஜென்ம பூமி" எ. இ. பாடுக

இனிய நம் தாய் நாடு இனிய நம் தாய் நாடு
இனிய நம் தாய் நாடு

கனியின் மிக்க இன்பம் கன்னி
காட்டு மின்பம் தன்னினும்
நனிமகிழ்ச்சி ஈயும் ஈடில் (இனிய நம்தாய் நாடு)

சேர சோழ பாண்டி மன்னர்
பாரோர் போற்றும் வகையினில்
வீர மாய்முன் ஆண்ட நாடு (இனிய நம்தாய் நாடு)

தெள்ளு தமிழர் ஆட்சி யின்சீர்
வள்ளு வர்குறள் பேசுமே
கொள்ளை இன்ப இளங்கோ நூல்சேர் (இனிய)

அடிமை யழிய, மடிமை ஒழிய,
ஆண்மை கொண்ட செந்தமிழ்க்
கொடியை உலகம் போற்ற வாழ்ந்த (இனிய)

பகைவ ருக்கும் அன்பு காட்டும்
பண்பு மிக்க தமிழகம்!
நகைசெய் பகைவர் குலம்கெ டுக்கும் (இனிய)

## 27 பட்டம், பதவி ஏன்?

"ஐயா சிறு பெண் ஏழை என்பால்" எ. இ. பாடுக.

பட்டம், பதவி ஏன்? படித்த கெட்டிக்காரரே!—மிகக்
கெட்டிக்காரரே-சற்று எட்டி நிற்போரே!
பாவம்! நீதிக் கட்சிக்குநீர் பழியைத் தந்தீரே—மிக
இழிவு செய்தீரே-சுய நலமியானீரே! (ப)

சட்டமெலாம் கற்றறிந்தும் எட்டவில்லையோ?-
அறிவுக் கெட்டவில்லையோ?—காங்கிரஸ்
பட்டிதொட்டி ஊர்மக்களை மயக்கும் எல்லையே—
பதவிப்-பட்டங் களை விட்டுச்சிறைப் பட்டதல்லவோ—
தேசப்-பக்தர்களாய் த்யாகிகளாய் உயரவைத்த தால் (ப)

உதைத்தகாலை முத்தமிடல் உயர்ந்தசெய்கை யோ?—
நாம்-உதவிசெய்தும் நமைமதியா ஓரவஞ்சகர்—தரும்
மதித்தபட்டம் பதவிபெற்று வாழ்தல் மேன்மையோ?
மானமுடன் ஊர்மதிக்க வாழ்தல் மேன்மைபால் (ப)

## 28 ஜாதி மத பேதமேன்?

"பர்டும் சிதம்பரமாம்" என்ற இசையிற் பாடுக

ஜாதி மதபேதமேன்? — வீணே
சமய பேதங்களால் சார்ந்திடும் தீமையே!
வேதப் பெருமைகள் பொய் (ஜாதி)

பிறப்பால் பெருமையுண்டோ?—மக்கள்
பேணும்பகுத்தறி வால் உணர்வீர் உண்மைச்
சிறப்பார் திராவிடர்காள் (ஜாதி)

மதத்தால் மக்களெல்லாம்—என்றும்
வாழ்வில்முன் னேறுமல் தாழ்வுற்று வாடினர்!
இதைத்தான் உணர்ந்திடுவீர்! (ஜாதி)

பாழும் பார்ப்பனியம்—வாழப்
பாடுபட் டோர் செய்த கேடுறும் சூழ்ச்சிகாண்;
தாழும் ஜாதிமதம்! (ஜாதி)

## 29 திராவிடத் தொண்டர் கடமை!

"ஒருநாள் ஒரு பொழுதாகிலும்" எ. இ. பாடுக

பலநாள் பலதர மாகிலும் தன்மானப்
பண்பை உரைக்க வேண்டும்—மக்கள்
விழிப்படையப் (பல)

கலகஞ்செய் ஆரியக் கைக்கூலிகள் நமை வீழ்த்திடப்
பொய்க்
கதைசொல்லி மக்களை வதை செய்யாதிருக்க நாம் (பல)

அடிமை வாழ்வு நீங்க—அறிவின் ஆட்சி ஓங்க
அருமை யான ஒரு தொண்டாம்—இதுநம்
கடமை ஆகும்; மக்கள் மடமை—முற்றும் வீழும்
கவலை ஏது? நலம் உண்டாம்—துயர்

மிடிமை, தீமை விழுமே—பின் திராவிட
மேன்மை எழுமே—சாதிக்
கொடிய, வைதிகம் அழுமே—உலகம்
கூடி நம்மைத் தொழுமே—அதனுல் (பல)

## 30 திராவிடம் நமது மூச்சு

'அன்னையின் காலில் விலங்குகளோ?' எ.இ. பாடுக

திராவிடம் நம்முயிர் மூச்சல்லவோ?—இதைப்
பெருவிடில் நமக்கு ஏச்சல்லவோ?-இன்பத் (தி)

பராவுயர் வளமிக்க வடமலை எல்லையுடன்
பெருநக ரும்பல கோடிமக் களும் உள (தி)

நம்மினும் சிறுதொகை நாட்டினர் தனியர சுடனே
செம்மையுற வாழ்வுகொண்ட சேதிகண்டுமா?-இன்னும்
கம்மென உறங்கிக் கொடுமைக் கடங்கி வாழும்
அடிமை போல் வாழல் நன்ரே?—மானம்
பெரிதல்லவோ?—வளமிக (தி)

## 31 இந்தி ஏன்?

'ஞானக்கண் ஒன்று இருந்திடும்' எ. இ. பாடுக

தீந்தமிழ் ஒன்று இருந்திடும் போதினிலே
தீயஇந்தி பயின்ருல் சேர்ந்திடும் நன்மை யாதோ (தீ)

பைந்தமிழ் தன்னைப் போக்க, பாழிந்தி யைஉண்டாக்கிப்
பார்ப்பனர் செய்யும் சூழ்ச்சி பாரில் நமக்கு வீழ்ச்சி (தீ)

பொதுமொழி எனப்புகன்று புகுத்திட்டார் இந்திஇன்று
மதுரத்தமிழ் தானந்தப் பொது மொழி யாகாதோ? (தீ)

ஆங்கிலர் போற்றும் மொழி அதற்கும் செய்திட்டார்பழி
தீங்கிலாத் தமிழ் நாட்டுத் திராவிடர் உயிர் போன்றிடும்
இலக்கண இலக்கியங்கள் யாவும் நன்றாய் நிறைந்து
நிலைக்குநந்தமிழோ டிந்தி நிகராமோ? சொல்வீர் (தீ)

## 32 திராவிடஸ்தான் வேண்டுவோம்!

'ஆசை முகமறந்து போச்சே' எ .இ. பாடுக

வீரத் திராவிடர் அந்தோ!-மிக
வீழ்ச்சியுற் றுள்ளனர்; தோழா!—வெறும்
சார மற்றசிறு வாழ்வில்—இவர்
சாவ விடலாமோ? தோழா! (வீ)

குடும்பக் கவலைகள் விட்டு-நமக்
கிடும்பை சேர் ஆரியம் வீழ்த்த—உழைத்
திடும் பெரியாரின்கீழ் ஒன்றாய்—இனி
திராவிடஸ்தான் கோள்வோ மின்றே! (வீ)

வீறிட்டெழுந்துழை; தோழா—இன்னும்
வீண்காலாய் போக்காதே பாழாய்,-தமிழ்ச்
சோறுண் டுலகெலாம் போற்ற—மீண்டும்
சுதந்திர வாழ்வுச் சங்கூது! (வீ)

## 33 இனக் கொலை நூல் ஏன்?

'சந்திர சூரியர் போங்கதி' எ. இ. பாடுக

கம்பரா மாயண, பெரிய புராணப் பொய்க்
கற்பனை நூல் நமக்கேன்?
வம்புதான் சேரும் நாமிந்நூல் கற்பதால்!
வாருங்கள்; எரித்திடுவோம்! (கம்ப)

தேனினும் பாலினும் தித்திக்கும் சங்கநூல்
திருக்குறள் கற்றிடுவோம்!
வீணில் இனக்கொலை செயுங் கம்பன் நூல்எரித்
தினநலம் உற்றிடுவோம் (க)

## 34 பிரிவினை என்றோ?

'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து' எ. இ. பாடுக.

திராவிட நாடு பிரிந்தே—இன்ப ரஷ்ய ஆட்சி
பரவிடும்நாள்—என்றோ? (திராவிட)

அராவிஷ வருணா சிரமம்—அழிந்தொழிந்து
பெருந்தமிழ் மக்கள் அறிவால்—வாழ்வில்
பெருநலமே பெறுவதென்றோ? (வாழ்வில்)

பெரியார்சொல் உணர்வதென்றோ?—நல்
பழந்தமிழ்ச்சீர்களெலாம் இனிமுழுதும்
பாரில் பெறுவதென்றோ?—அந்தோ!
பைந்தமிழர் அறிந்தறிந்தும்

பார்ப்பனரைப் புகழ்வாரோ?—இவர்
சிந்தை திருந்தி உய்ய—அண்ணாத்துரையின்
திருவுரை கேளாரோ?-வீணில்
வழிதினி மாள்வாரோ? (திராவிட)

## 35 தீண்டாமை ஒழிப்பீர்!

"தெருவில் வராண்டீ வேலன்" எ. இ. பாடுக

தீண்டா மைவழக்கம்—இனிமேல்
வேண்டாமே, விடுவீர் (தீண்டாமை)

ஈண்டுழைக்கும் தமிழர்களைத் தீண்டாதா ரென்றே
வேண்டுமென்றே உழைப்பவரை வீழ்த்துதல்
நன்றோ?-கொடிய (தீண்)

சகோதரத்வம், சமதருமம், சுதந்திரம் என்பீர்;
பகைவரைப் போல் பஞ்சமரைத் தாழ்த்துதல்
அன்போ-அந்தோ! (தீண்)


## 36 கலப்பு மணம் செய்க

'சுட்டும் இருவிழிதாம்' எ. இ. பாடுக

கலப்பு மணஞ் செய்தால்-நாட்டின்
கவலை முற்று மொழியும்;
குலப் பிணி,மதநோய்—ஜாதிக்
கொடுமை எலாமழியும்! (கலப்பு)

உலகப் பெரியார்கள்—யாவரும்
கலப்பு மணத்துதித்தார்!
கலக மொழித்தின்ப—விடுதலை
காட்டும் வழியிதுகாண்! (கலப்பு)






"........திராவிடர் கழகக் கொள்கைகளைப் பல பாக்கள் வாயிலாகக் காட்டுகின்றார், தோழர். தேவராசன். இனிய எளிய நடையில் வீர உணர்ச்சி ஊட்டும் முறையில் பாக்கள் இயற்றப்பட்டுள்ளன. க. ச. படையினர் பாடுதற்கு ஏற்ற பாடல்கள்"

"குடி அரசு"— 1-3-47

விலை 0 8 0

வியாபாரிகட்கு 25% கழிவு.

விவரங்கட்கு:-

ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம்